ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியின் ஸ்ரீ சக்கரம் என்பது மகிமை வாய்ந்த சக்கரம். அதை பூஜித்து வணங்கி வந்தால் வாழ்வில் செல்வம், இன்பம், மற்றும் ஆரோக்கியம் போன்ற அனைத்தும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. ஆனால் அதை யந்திரமாக வைத்து தவறான முறையில் பூஜிக்கக் கூடாது. நமக்கு நல்ல பலன் கிடைக்க குருவின் உதவில் இல்லாமல் யந்திர உபயோகம் செய்வதை விட சிறந்ததும் சுலபமானதும் என்ன என்றால் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அதை பூஜை அறையில் அரிசி கோலமாகப் போட்டு மஞ்சள் மற்றும் குங்குமத்தினால் ஆன வண்ண பொடிகளைத் தூவி, நெய் விளக்கு ஏற்றி பூஜை செய்து ஆராதிக்கலாம்.

ஸ்ரீ சக்கிரம் போடுவது எப்படி? அது மிகவும் கஷ்டமான கோலம் ஆயிற்றே என யோசிக்க வேண்டாம். அது போடும் முறையை நாம் புரிந்து கொண்டு விட்டால் அதை போடுவது சுலபம்.

# ஸ்ரீ சக்கரம் வரைவது எப்படி?


எழுதியவர்

சாந்திப்பிரியா


(இந்த வரை படங்களின் ஆதாரம் http://gurujiamrita.tripod.com)




முதலில் 48 யூனிட்
வருமாறு
ஒரு சதுரக் கட்டம்
போட்டுக்
கொள்ளவும். அதாவது
நீங்கள்
ஒரு அடி சதுர கோலம்
போட
வேண்டும் எனில் அதை
மேலே
உள்ளது போல 1½ , 1½,
1½,¾ , 1, ¾, ¾, , 1¼ , 1½, 1½
அங்குல கட்டங்களாகப்
பிரித்துக்கொள்ளவும். அதன்
பிறகு அதற்குள்அடங்குமாறு
ஒரு வட்டம் போடவும்.
இப்போது கோலம் போடத்
தயார் ஆகலாம்.




A என்ற எழுத்தை

8 எண்ணுடன்

இணைத்து

முக்கோணம்

ஆக்குங்கள்

அது போல

L என்ற

எழுத்தை

4 எண்ணுடன்

இணைத்து

முக்கோணம்

ஆக்குங்கள்




K என்ற எழுத்தை
3 எண்ணுடன்
இணைத்து
முக்கோணம்
ஆக்குங்கள்
அது போல
B என்ற
எழுத்தை
9 எண்ணுடன்
இணைத்து
முக்கோணம்
ஆக்குங்கள்

**முக்கியமாக**
**கவனிக்க வேண்டியது**

அப்படி செய்யும்
போது B ல்
இருந்து செல்லும்
கோடு 8 ல்
உள்ள முக்கோணங்கள்
சந்திக்கும் இடத்தையும்
K ல் இருந்து செல்லும்
கோடு 4 ல் உள்ள
முக்கோணங்கள் சந்திக்கும்
இடத்தையும் கடந்து
செல்ல வேண்டும்.




**E** என்ற எழுத்தை
10 எண்ணுடன்
இணைத்து
முக்கோணம்
ஆக்குங்கள் அது போல
**H** என்ற எழுத்தை
2 எண்ணுடன் இணைத்து
முக்கோணம் ஆக்குங்கள்

**E** யில் இருந்து
இரு பக்கமும்
படத்தில் உள்ளது
போல கோடு இழக்கவும்

**முக்கியமாக**
**கவனிக்க வேண்டியது**

அப்படி செய்யும்
போது **E** ல்
இருந்து செல்லும்
கோடு 6,8,9 ல்
உள்ள முக்கோணங்கள்
சந்திக்கும் இடத்தையும்
**K** ல் இருந்து செல்லும்
கோடு 6,4,3 ல் உள்ள
முக்கோணங்கள் சந்திக்கும்
இடத்தையும் கடந்து
செல்ல வேண்டும்.




E என்ற எழுத்தை
10 எண்ணுடன்
இணைத்து
முக்கோணம்
ஆக்குங்கள் அது போல
H என்ற எழுத்தை
2 எண்ணுடன் இணைத்து
முக்கோணம் ஆக்குங்கள்

E யில் இருந்து
இரு பக்கமும்
படத்தில் உள்ளது
போல கோடு இழக்கவும்

**முக்கியமாக**
**கவனிக்க வேண்டியது**

அப்படி செய்யும்
போது E ல்
இருந்து செல்லும்
கோடு 6,8,9 ல்
உள்ள முக்கோணங்கள்
சந்திக்கும் இடத்தையும்
K ல் இருந்து செல்லும்
கோடு 6,4,3 ல் உள்ள
முக்கோணங்கள் சந்திக்கும்
இடத்தையும் கடந்து
செல்ல வேண்டும்.




D என்ற எழுத்தை
6 எண்ணுடன்
இணைத்து
படத்தில் உள்ளது
போல முக்கோணம்
ஆக்குங்கள்

அதன் நடுவில்
படத்தில் உள்ளது
போல சிறிய
வட்டம்
போடவும்



தேவை இல்லாத கோடுகளை
அழிக்கவும். இனி உங்களுடைய
ஶ்ரீ சக்கரம் தயார்.
தேவை எனில் அதில்
கீழே காணும் படங்களின்படி
வண்ணம் தீட்டவும். இல்லை
எனில் அதை அப்படியே
பயன்படுத்தலாம்



முதலில் இதில்
காணும் படத்தின்படி
வண்ணம் தீட்டவும்.



அடுத்து இதில்
காணும் படத்தின்படி
இரண்டாவது
வண்ணம் தீட்டவும்.



அடுத்து இதில்
காணும் படத்தின்படி
மூன்றாவது
வண்ணம் தீட்டவும்.



அடுத்து இதில்
காணும் படத்தின்படி
நான்காவது
வண்ணம் தீட்டவும்.



அடுத்து இதில்

காணும் படத்தின்படி

ஐந்தாவது

மற்றும் ஆறாவது

வண்ணம் தீட்டவும்



அனைத்து வண்ணமும்
போட்டு முடிந்ததும்
பூஜிக்க
ஸ்ரீ சக்கரம்
தயார்



ஸ்ரீ சக்கரத்தை தியானிப்பதின்
முலம் மனம் அமைதி பெறும்,
செல்வம் பெருகும்,
ஆரோக்கியம் கிடைக்கும்,
வாழ்கை வளம் பெறும்.
அது போல அதை
மற்றவர்களுக்குக் கொடுப்பதும்
புண்ணியத்தைத் தரும்